மாகாணக் கல்வித் திணைக்களம் - சப்பிரகமுவ – வாராந்த பாடசாலை

வாரம் : 09

பாடம் : இலக்கியநயம்

தரம் : 10

தயாரிப்பு : K.சர்மிளா
கே / தெஹி / ஸ்ரீ கதிரேசன் த.ம.வி.
தெரணியகலை

**<u>எல்லா வினாக்களுக்கும் விடை தருக</u>.**

1. புத்தகசாலை கவிதையின் ஆசிரியர் யார்?

2. அவருடைய வேறு படைப்புக்கள் மூன்று தருக.

3. **“தனித்தமைந்த வீட்டில் புத்தகமும் நானும்**
   **சையோகம் புரிந்ததொரு வேளைதன்னில் “**
   இங்கு சையோகம் புரிதல் என்றால் என்ன?

4. புத்தக வாசிப்பில் மூழ்கியிருந்த கவிஞர் தாம் கண்டதாக கூறும் விடையங்கள் யாவை?

5. சுவடிச்சாலை என்றால் என்ன?

6. **“நாலைந்து வீதிகளுக்கொன்று வீதம்**
   **நல்லதுவாய் வசதியதாய் இல்லம் வேண்டும்”**
   இவடியின் சிறப்பை விளக்குக.

7. நூலகம் குறித்து கவிஞரின் எதிர்பார்ப்பு எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?

8. இக்கவிதையில் இடம்பெறும் சொல்லணிகள் எவை?உதரணம் தருக.

9. **“கோலமுறும் செய்தித்தாள் அனைத்தும் ஆங்கே**
   **குவிந்திருக்க வகை செய்து தருதல் வேண்டும்.”**
   இங்கு கோலம் என்ற பதம் உணர்த்தும் பொருள் யாது?

10. இக்கவிதையில் நீர் விரும்பும் அடியினை எடுத்துக்காட்டி அதன் சிறப்பை விளக்குக.

11. நாட்டில் எங்கணும் புத்தகசாலைகள் வேண்டும் எனக் கவிஞர் கூறுவதற்கான காரணம் யாது?

12. பின்வரும் அடிகளின் இலக்கிய சிறப்புக்களை விளக்குக.
**அ.மகா சோதியில் கலந்த தெனது நெஞ்சம்**
**ஆ.அமுதம் போல் செந்தமிழின் கவிதை நூல்கள்**
**இ.மனோபாவம் வானைப் போல் விரிவடைந்து**
**தனி மனித தத்துவமாம் இருளை போக்கி**

13. **"நினைப்பாலும் வாக்காலும் தேகத்தாலும் தொண்டிழைப்பீர்! "**
என கவிஞர் யாரை விளிக்கின்றார் ?

14. **ஆசித்த** என்ற சொல்லின் பொருள் யாது?

15. பாரதிதாசன் "நாலைந்து வீதிகளுக்கு ஒன்று வீதம் "என்ற பாடலிலே எவ்விதம் புத்தகசாலையை வடிவமைக்க வேண்டும் என விரும்புகிறார்?